2007 ஜனவரி 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: (குறுக்கீடு) நீங்களும் அதே subject-தானே பேசப் போகிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகளிலே செய்திகள் வந்திருந்தாலும்கூட, பொதுவாக பாலாற்றிலே எப்போது தண்ணீர் வருகிறது என்பது இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் தெரியும். மழை பெய்தால் தண்ணீர் வருகிறதே தவிர, அங்கே கர்நாடகாவிலேயிருந்து அணையைத் திறந்து தண்ணீர் வருவது என்பது பத்தாண்டுகளுக்கு ஒரு முறை அல்லது பதினைந்து ஆண்டுகளுக்கு ஒரு முறைதான். இதற்கிடையிலே, பல அணைகளை அந்தப் பகுதியிலே கட்டிவிட்டார்கள். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு இந்த அரசு தக்க நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி செய்யும்.

(ஆ) பண்ருட்டி, முந்திரி ஏற்றுமதி மையம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பண்ருட்டி சட்டமன்றத் தொகுதியின் உள்ளடங்கிய பகுதியில், முந்திரி விவசாயம் அதிகமாக உற்பத்தியாகின்ற காரணத்தினால், முந்திரி விவசாயிகளுக்கு ஏற்றவாறு, அங்கு ஓர் ஏற்றுமதி வணிக வளாகம் அமையவேண்டுமென்று நான் கடந்த ஐந்து ஆண்டுகாலமாகக் குரல் கொடுத்தேன், அது நடைபெறவில்லை. ஆனால், கடந்த கூட்டத் தொடரில் நான் குரல் கொடுத்தேன். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், அதற்கான நிதி 10 கோடி ரூபாயில் முந்திரி வணிக வளாகம் அமையும் என்று அறிவித்தார். அப்படி அறிவித்ததனுடைய அடிப்படையிலே, நேற்றைய முன்தினம் நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடு, துறையினுடைய அதிகாரிகள் அங்கே ஆய்வு செய்திருக்கிறார்கள். அப்படி ஆய்வு செய்து, அங்கு ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்கின்ற நல்ல செய்தியையும் அறிவித்திருக்கிறார்கள். ஆனால், தொடர்ந்து ஐந்து ஆண்டுகாலமாக முந்திரி தொழிற்சாலை அமைய வேண்டிய இடம் பண்ருட்டி என நான் வேண்டுகோள் வைத்தேன். நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்கள் வருகை தந்தபோதும் நான் அந்தக் கருத்தை

வலியுறுத்தினேன். ஆனால், அது வேறு இடத்தில் அமைவதாகச் செய்தித் தாள்களில், பத்திரிகைகளில் வெளிவந்து, இன்றையதினம் பண்ருட்டி மற்றும் விருத்தாசலத்தில் அந்த முந்திரியை அதிகமாக உற்பத்திச் செய்யக்கூடிய மக்களெல்லாம் ஒன்றுசேர்ந்து அங்கே மிகப்பெரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆதலால், அந்த முந்திரி தொழிற்சாலை, முந்திரி எங்கு உற்பத்தி அதிகமாக இருக்கிறதோ, அதற்கு முக்கியத்துவம் தரும் வகையிலும், என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றுகின்றவகையிலும் பண்ருட்டியிலேயே அந்த முந்திரி ஏற்றுமதி வணிக வளாகத்தை அமைத்து, அந்த மக்களுக்கு ஒரு பாதுகாப்பு அரணாக இருப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அந்த முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலையில் அதற்கான சொசைட்டியில் உறுப்பினர் சேர்க்கையெல்லாம் கடந்த கால ஆட்சியில் தவறுதலாக அவர்களுக்கு வேண்டப்பட்டவர்களை மட்டும் அதிலே சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதையும் மறுபரிசீலனை செய்து, புதிதாக அறிவித்து, அந்த முந்திரி ஏற்றுமதி வணிக வளாகம் ரூ.10 கோடியில் பண்ருட்டியில் அமைவதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கவேண்டும் என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்திரி ஏற்றுமதி மையம், கடந்த நிதிநிலை அறிக்கையின்போது அறிவித்து, 10 கோடி ரூபாயில் கடலூரில் அமைக்கப்படும் என்றுதான் அறிவித்திருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி தொகுதி சட்டப் பேரவை உறுப்பினராக இருக்கக்கூடிய காரணத்தினால், அந்தப் பகுதியிலே அதிகமாக முந்திரி விளைகின்ற காரணத்தால், அங்கே இந்த ஏற்றுமதி மையத்தை அமைக்கவேண்டுமென்று அவருடைய விருப்பமாக, வேண்டுகோளாக அங்கே கேட்கின்றார். ஆனால், கப்பல் போக்குவரத்து, ஏற்றுமதிக்கான சூழ்நிலை கடலூரில் உள்ளது. பண்ருட்டிக்கும் கடலூருக்கும், ரொம்ப தூரம் இல்லை. அதனாலே, கடலூரில் அமைப்பதுதான் சிறந்ததாக இருக்கும் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள். இருந்தாலும், இன்னும் அதுபற்றி இறுதி முடிவை அரசு எடுக்கவில்லை. அவருடைய கேள்வியைக் கருத்திலேகொண்டு அரசு பரிசீலிக்கும்.